காவலன் வருடசந்தா
இலங்கை, வெளிநாடுகள்
ரூபா 9-00
(தபாற்செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

நன்மை செய்யப் பிறந்த நீ
நன்மை செய்யாவிட்டால்
தீமையாவது செய்யாதிரு.

94-ம் புத். | 1969-ம் ஆண்டு பங்குனி மாதம் 15-ந் திகதி சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 10-ம் இல.

# மாகாண சங்கம் முடிவை அண்முகின்றது

## ஆயர்கள் ஒருவார செபத்துடன் சிந்தித்துத் தீர்மானிப்பார்கள்

சென்றவருடம் பரிசுத்த ஆவியின் திருநாளுடன் ஆரம்பமான மாகாண சங்கம் இறுதிக் கட்டத்தை அண்மித்திருக்கின்றது. அண்மையில் ஆயர்கள் அனைவரும் மறைவட்டாரப் பிரதிநிதிகளும் கூடிக் கடைசி உரையாடல் நடத்தினர். இதன்பின்பு ஒரு நாள் பூராகக்கூடிய ஆயர் கூட்டம் மாகாணசங்கத்தின் பிரேரணைகளை அமுல் செய்யத் தேசியமேய்ப்புப் பணி ஸ்தாபனமொன்றை நிறுவும் பொறுப்பை மிகவந், எமிலியானுஸ்பிள்ளை அவர்களைத் தலைமையாகக் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைத்திருக்கின்றனர்.

சங்கத்தின் முடிவுகளை ஏடுகளாக ஆயத்தம்செய்யும் பொறுப்பை மிகவந். மார்க்கஸ் பெர்ணாந்துவும், மிகவந். தியோகுப்பிள்ளையும் ஏற்றுக்கொண்டனர்.

அம்பிற்றியா பெரிய குருமட அதிபர் வண. போப்ஸ் ஆயர்குழுவின் மறைவல்லுனராக நியமிக்கப்பட்டார்.

வைகாசி முதல்வாரத்தில் ஆயர்குழுவும் மறைவல்லுனரும் அமைதிசூழ் அம்பிற்றியாவில் கூடுவார்கள். அங்கேசெபத்துடன் சிந்தித்து, மாகாணசங்க ஏடுகளுக்குத் தங்கள் வாக்கைக் கொடுப்பார்கள். ஈற்றில் வைகாசிமாதம் 25 ஆம் தேதி (பரிசுத்தஆவியின் விழா) சங்கம் பகிரங்க சடங்குகளுடன் கருதினால் கூறே அவர்களால் மூடிவைக்கப்படும்.



## காத்திருங்கள் காவலனில்!

- மாணவரின் சிறுகதைப் போட்டி
- பாப்பானவரின் வாராந்த சொற்பொழிவுகள்
- கிறீஸ்தவ தலைநகரின் புதினங்கள்

இன்னுப்பல புதிய அம்சங்களுடன்
காட்சியளிக்கும் "காவலனின்" கதிர்களை
எதிர்நோக்குங்கள்.

## பரிசுத்தநாட்டு யாத்திரிகர்க்கு ஓர் உறுதிமொழி

பலஸ்தீனு முதலிய பரிசுத்தநாடுகள் இப்பொழுது இஸ்றவேல் அரசாங்கத்தின் பரிபாலனத்தில் இருந்து வருகின்றன. சென்றவருட யுத்தத்தின் பின் நிலைமை இவ்வாறு இருக்கின்றது. பரிபாலனத்தை இஸ்றவேல் நடத்தத்தொடங்கியதும் பிறநாட்டவரின் யாத்திரையினுல் வரும் வரும்படியில் கண்ணும் கருத்துமாய் இஸ்றவேல் நாடு இருக்கின்றது. சென்றவருடம் முன்னிலும் ஏராளமான யாத்திரிகர்கள் அங்கு சென்றிருந்தனர். சமய பக்தியுடைய யாத்திரிகர்களுடன் உல்லாசப் பிரயாணிகளினது தொகையும் கூடிவிட்டது. ஆகவே பரிசுத்தஸ்தலங்களின் புனிதத்தன்மைக்குப் பங்கம்வராதபடி இஸ்றவேல் அரசாங்கம் பிரயாணிகள் நடந்துகொள்ளவேண்டிய முறைகளை அங்கு செல்லும் யாவருக்கும் வற்புறுத்துகின்றது. யாத்திரிகர்களுக்கு ஏற்ற சகல வசதிகளும் கவனிக்கப்படும் என உறுதி அளித்திருக்கின்ருர் இஸ்றவேல் நாட்டு உள்நாட்டு விவகாரமந்திரி டிஷாலிற் என்பவர்.

## ஆபிரிக்க ஆயர் மகாநாடு

ஆபிரிக்க கருதினல் றுகம்பாவா தலைமையின்கீழ் வருகிற ஏப்பிரல் மாதம் 13-ம் திகதி உகண்டாவில் சகல ஆபிரிக்க ஆயர்களும் கூடுவார்கள். பரந்த ஆபிரிக்க கண்டத்தின் திருச்சபையில் இன்று 5 கருதினல்மாரும். 250-க்கு மேற்பட்ட ஆயர்களும் இருக்கிருர்கள். இவர்களின் வேலைகளைத் தொடர்புபடுத்தவும், ஒழுங்குபடுத்தவுமே மகாநாடு கூடுகின்றது.

## கத்தோலிக்கர் தொகை

1968-ம்ஆண்டு எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களிலிருந்து ஸ்கொட்லாந்து கத்தோலிக்கர்தொகை 888000 எனத் தெரியவருகின்றது: இது அத்தேசத்திலுள்ளவர்களில் நூற்றுக்கு 17சதவிதமாக இருக்கிறது. ஞானஸ்நானம் பெற்றகுழந்தைகளின் தொகை 21,604. இது அத்தேசத்தில் அவ்வருடம் பிறந்த குழந்தைகளில் 22·8 வீதமாகும். வளர்ந்தவர்களில் கத்தோலிக்கராக மனந்திருப்பப்பட்டவர்களின் தொகை முந்தியவருடத்திலும் குறைவாகவே இருக்கிறது.

## முதல் டீக்கன்

தென்அமெரிக்க கண்டத்தில் சில்லிதேசத்தில் உத்தமசிவியத்துக்குப் பெயர்பெற்ற ஒரு தச்சன் முதன்முதலாக டீக்கனுகப்பட்டம் சூட்டப்பட்டார். இவர் பெயர் சாமுவேல் ரெூபெலேடோ. இவர் விவாகமானவர். ஞானஸ்நானம் கொடுத்தல், விவாகச்சடங்குகள், மரண அடக்கச்சடங்குகள் நிறைவேற்றுதல் முதலியவற்றில் குருவானவருக்குப் பதிலாக இவர் தொண்டாற்றுவார். எனினும் தச்சுவேலையையும் தொடர்ந்து செய்து சிவியத்தை நடத்திக்கொள்வார்.

## உங்கள் பங்குக் கோயிலும் பாப்பரசரும்

"உங்கள் சமுதாயத்தின் ஆன்மாவாக இயங்குவது உங்கள் பங்குக் கோவில். அது இறைவனின் இல்லம், ஏனெனில், அதனுள் செபங்கள் ஓதப்படுகின்றது. அது மனிதரின் இல்லம், ஏனெனில், அங்கே கூடும் மனிதர் தாங்கள் சமத்துவமாகச் சகோதரரென்றும், கிறீஸ்துவின் அன்பிலும் ஒத்துழைப்பிலும் உழைக்கும் விசுவாசிகளென்றும் ஏற்றுக்கொள்ளுகின்றனர்"

இவ்வாறு எமது 6-வது சின்னப்பர் ரூமை, சம்பேதுருவின் சதுக்கத்தில் சென்றஞாயிறு திரளான மக்கட்குத் தெரிவித்தார். ரூமையின் எல்லைகளிலே புதிதாகத் தோன்றிவரும் குடிசனத்திற்கு 50-க்கு மேற்பட்ட கோவில்கள் கட்ட மக்களின் உதவி கோரும்முகமாக "ரூமையின் புதிய கோவில்கள் தினம்" ஒன்று மார்ச் 2-ம் திகதி ரூமை முழுவதும் அனுசரிக்கப்பட்டது.

## கன்னியாஸ்திரியாரின் சேவை உங்களுக்குப் பாடமாகட்டும்

கொழும்பு அதிமேற்றிராசன துணைஆயராகிய எட்மண்ட் பெர்ணாந்து அடிகளார் சென்றவாரம் பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியாஸ்திரி மடக்கல்லூரிப் பரிசளிப்புவிழாவில் தலைமை தாங்கி ஆற்றியசொற்பொழிவில் அப்பள்ளிக்கூட மாணவிகளுக்கு அவர்களின் ஆசிரியைகளாகிய கன்னியர்கள் காட்டும் நல்லொழுக்க முன்மாதிரியைக் கண்டுபாவிக்க கேட்டுக்கொண்டார். மேலும் அக்கல்லூரி மாணவிகள் சமூகசேவையில் ஈடுபடுவதும் சுற்றுடலில் இருக்கும் வறியவர்களுக்குத் துணைபுரிவதும் தமது விசேஷசேவைகளாக்கிக் கொள்ளவேண்டுமென்றும் விண்ணப்பித்தார்.

## செல்வ கத்தோலிக்க கிராமங்கள் வறிய கிராமங்களுக்கு உதவுகின்றன

கத்தோலிக்க சேவையில் ஒருவர் ஒருவருக்கு உதவியாய் இருக்கவேண்டுமென்பதற்கு இங்கிலாந்து தேசத்தில் லங்காஸ்ரர் பிரிவில் உள்ள இருகிராமங்கள் எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன. ஒருவறிய கிராமத்திலுள்ள கத்தோலிக்கருக்கு ஒருகோவில் தேவைப்பட்டதை உணர்ந்து அப்பிரிவிலுள்ள செல்வம் படைத்த வேறு ஒரு கிராமம் அப்பணத்தை உதவ முன்வந்துள்ளது. இத்தகைய முறையை லங்காஸ்ரர் மேற்றிராசனம் கையாண்டு வருகின்றது.

## தேவைக்குப் போதிய குருமார் இல்லை

சென்ற 3வருடங்களில் கத்தோலிக்கரின் தொகை 8,450,660ஆல் அதிகரித்து இன்று 495,632,180ஆக இருக்கின்றது என சென்ற வருட புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. எனினும் குருமாரின் தொகையில் அதிக வித்தியாசம் ஏற்படவில்லை. ஐரோப்பாவில் 1,161கத்தோலிக்கருக்கு ஒருகுருவானவர் சேவைசெய்யக்கூடியதாகவும், அப்படியே அமெரிக்க கண்டங்களில் 4,123 பேருக்கு ஒருகுருவும், ஆசியாவில் 10,202பேருக்கு ஒரு குருவும், ஆபிரிக்காவில் 10,213பேருக்கு ஒரு குருவுமாகவே தொண்டாற்றிவருகின்றனர். ஆகவே குருமாரின்தொகை விரைவில் கூட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வாரியின் காட்சிகாண வாரீர்!**

வாழ்க்கைப் பாதையில் வரலாற்றுப்பாதை
வகுத்த வள்ளல்
வாள் வீசாது வையகம் வென்ற வேந்தன்
அன்புச் சுமைதேடி துன்பச் சுமைசுமந்த தூயவன்
அன்று குருதிசிந்தி குவலயம்மீட்ட கிறீஸ்து
கல்வாரியில் சாவை வெல்லும்

**“திருப் பாடுகளின் காட்சி”**

இடம்: யாழ்: ஆசனக்கோவில் மைதானம், யாழ்ப்பாணம்:
நாள்: 28, பங்குனி, 1969. நேரம்: மாலை, 6-30மணி:


# பிற மதத்தினர்முன் கிறீஸ்துவிற்கு சாட்சியமளிக்க வெட்கம்!

**“பல தடவைகளிலே நாம் பிறமதத்தினருடன் பழகுகின்றோம், பேசுகின்றோம், அன்பாக நடக்கின்றோம். ஆனால் எமது சகோதரர்களாகிய இவர்களுக்கு முன்பாகக் கிறீஸ்துவை அறிவிக்க, கிறீஸ்துவ அன்பைக்காட்ட நாம் வெட்கிக்கிறோம். இதுவே எமது பரிதாபநிலை,”**

இவ்வாறு சென்ற 10-3-69 திங்கட்கிழமை யாழ்ப்பாணம் டிமொன்போட் சாலையில் நடந்த **அன்பர் அரங்கம்** கருத்துத் தெரிவித்தது.

## என் சகோதரனுக்கு நானோ காவலன்?

திரு. எம். அந்தோனிப்பிள்ளை, B. A. கடவுளுக்குக் காயின்விடுத்த வினைவை— “என் சகோதரனுக்குநானோ காவலன்?” — தலையங்கமாக எடுத்துப் பேருரை நிகழ்த்தினார். கிறீஸ்தவனின் அடிப்படைக் கடமை எவ்விதம் நம் சகோதரர்மட்டில் உருவமெடுக்க வேண்டுமென்று விளக்குகையில் கூறினார். “நாம் இறைவனை அறியவும், என் சகோதரன் அவரை அறியச் செய்யவும், நாம் இறைவனை நேசிக்கவும், என் சகோதரன் அவரை நேசிக்கச் செய்யவும், நாம் இறைவனுக்குப் பணிபுரியவும், என் சகோதரன் அவருக்குப் பணிபுரியச் செய்யவும், நாம் அடையும் இறைவனை அவன் அடையப் பண்ணவும் நாம்சீவிக்கவேண்டும்”

உரையாடலுக்கு முடிவுரை கூறிய வண. பிதா ராசீசியஸ் பர்னந்து — “காயின் ஆபேலுக்குக் காவலனும் — மூத்தவன் இளையவனுக்குக் காவலனும். அதேவிதத்தில் உள்ளவன் இல்லாதவனுக்கும் அறிஞன் அறியாதவனுக்கும், பெரியவன் சிறியவனுக்கும், பணக்காரன் ஏழைக்கும் காவலனுகின்றான் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது மனிதன் உருவாக்கிய அமைப்பல்ல. இது ஆதியில் ஆண்டவன் மனுக்குலத்துடன் உருவாக்கிய திட்டம்” என்று கூறினார்.

மேற்படி கூட்டங்கள் மறை சமூக சம்பந்தமான விஷயங்களை மாதமொருகூட்டத்தின் வழியாக ஆராய்ந்து வருவதும் அதில் ஆண்களும் பெண்களும் அதிக தொகையில் உணர்ச்சியுடன் பங்குபற்றுவதும் நமக்குச் சந்தோஷத்தை கொடுக்கின்றது. —நிருபர்


நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்துவிட்டீர்களா?
இல்லையேல்
இன்றே சேருங்கள்.

கண்ணைக் கவரும்
கலர்ப்படங்களைத் தாங்கி
இனியதமிழில்—
எளியநடையில்
படிப்பனைக்
கருவூலங்கள் செறிந்து
வெளிவரும் மாதஏடு

**நற்கருணை வீரன்**

பிரதிவிலை சதம் 6 மாத்திரம்

சேர விரும்புவோர் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

புனித சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


(பேசும்பேனு தொடர்ச்சி)

### பாக்கியவான் யார்?

புனிதர் லோங்கினுஸ், இன்னும் பலர் ஏசுநாதரின் நடைமுறைகளைக்கண்டு விசுவசித்தனர். தொம்மையாருக்கு நமதாண்டவர் கூறியதுபோலவே காணுமல் விசுவசிக்கிறவனே பாக்கியவான்.

# பிளவு ஏற்படும் அபாயத்தைத் தடுக்க வேண்டும்

ஐரோப்பிய பொதுச்சந்தை சமமேளனத்தில் இங்கிலாந்து சேர்ந்து கொள்ள விரும்புவதை பிரான்சு எதிர்ப்பதால் மேற்கு ஐரோப்பிய தேசங்களில் பிளவு ஏற்படும் அபயாயத்தைத் தடுத்துக்கொள்ள யாவரும் உதவவேண்டும் என்று பரிசுத்த தந்தை சென்றவாரம் வத்திக்கான் சம்பேதுரு தேவாலய சதுக்கத்தில் அவரைப்பேட்டி கண்டவர்களுக்கு எடுத்துக் கூறினார். “சமாதானத்தை இவ்வழியிற்றான் அடைய வேண்டுமென்று கூறுவது எமது பொறுப்பு அல்ல; ஆனால், ஒற்றுமைக்குவேண்டிய சூழ்நிலையை உண்டாக்குவது எமது கடமைகளுள் ஒன்று”என்றார் பரிசுத்ததந்தை வேது சின்னப்பபாப்பரசர்.

# பேசும் பேனு

### பங்குனி பதினைந்து

பங்குனி 15இல் கவனமாயிருமெனச் சோதிடன் கூறினன் யூலியஸ்சீசரிடம். சீசர் அதைக் கவனத்தில் எடுக்கவில்லை. அவைக்களம் சென்றான். அன்பன் புருட்டஸ் உட்பட எதிரிகள் அனைவரதும் கத்திக்குத்துகட்கு இரையானான். பங்குனி 15என்றவுடன் சேக்ஸ்பியரின் இலக்கியத்தைக் கற்றோருக்கு இந்நிகழ்ச்சியே மனத்திரையில் தோன்றும். ஆயினும் யான் கூறவந்ததுக்கும், சீசருக்கும் சம்பந்தமுண்டு. சீசரின் வழிவந்த மற்றொரு சீசர் இராயன் காலத்திலேதான் நமதாண்டவர் மரணத்தீர்வை பெற்றார். சீசரின் உரோமைப்படை யணியில் ஒரு வீரனைப்பற்றியே பேசும் பேனு இப்போது கூறப்போகிறது.

### புனிதர் லோங்கினுஸ்

நமதாண்டவர் சிலுவையில் தொங்குகிறார். ஆவி பிரிந்துவிட்டதா என்பதையறியக் குற்றவாளிகளின் கணுக்கால்களை முறிப்பார்கள். கிறிஸ்துவின் ஆவி ஏற்கனவே பிரிந்துவிட்டதை வீரர்கள் அறிவர். எனினும், நிச்சயப்படுத்த வேண்டுமே. எனவே, ஒரு வீரன் அவரது விலாவை ஈட்டியால் குத்தித் திறக்கிறான். அங்கிருந்து இரத்தமும், தண்ணீரும் சிந்துகிறது. இந்த உரோமைய வீரரின் பெயர் லோங்கினுஸ் என்பதாகும். இவரது கண்களிலொன்று பார்வையற்று இருந்ததாகவும் திருவிலாக்காயத்தினின்று தெறித்த சில துளிகள் அதில்பட பார்வைச்சக்தியை மீண்டும் பெற்றதாகவும் வரலாறு கூறுகின்றது.

### வேதசாட்சியா?

பார்வைபெற்ற லோங்கினுஸ் கிறிஸ்துவின் அடியார்களைப் பின்பற்றிக் கிறிஸ்தவமறையில் சேர்ந்ததாகவும், இதையறிந்த இராணுவத் தலைமைப்பீடத்தினால் மரணத்தீர்வையிடப்பட்டு வேதசாட்சியாக மரித்ததாகவும் சில வரலாறுகள் தெரிவிக்கின்றன. பங்குனி மாதம் பதினைந்தாம் திகதி திருச்சபை இவ்வீரருக்கு விழா எடுத்து மகிழ்கிறது.

### ஈட்டியின் புனிதமான கூர்முனை

பூவோடு கூடிய நாரும் மணம்பெறும். நமதாண்டவரின் வாழ்வில் இணைந்த எல்லாப் பொருட்களும், இடங்களும் இன்று புனிதம் மிக்கவையாகக் கருதப்படுகின்றன. எனவே அவரது திருவிலாவில் சென்று திரும்பிய ஈட்டிமுனையும் முக்கியத்துவம் வாய்ந்தது அல்லவா? அத்துடன் இந்த ஈட்டிமுனைக்கு அக்காலத்தில் வேறும் ஒரு செல்வாக்கு நிலவியது. யார் வசம் இப்புனித பொருள் இருக்கிறதோ அவர் ஈடிணையற்ற பலத்துடனும், செல்வாக்குடனும் விளங்குவார் என்பதே இக்கதை.

### சர்வாதிகாரி கிட்லர்

கிட்லரும் இக்கதையை நம்பினாரா? அவுஸ்திரியாவைக் கைப்பற்றியவுடன் வியன்னு நகரிலிருந்த புனித ஈட்டிமுனையைப் பேர்லின் நகருக்குப் பாதுகாப்பாகக் கொண்டுபோகும்படி கட்டளையிட்டாரெனச் சில செய்திகள் அக்காலத்தில் பரவின. இம்மாதிரிக் கதைகளில் கிட்லர் நம்பிக்கையற்றவராயின் கட்டாயமாக இப்பொருளை அழிக்கும்படியல்லவா கட்டளையிட்டிருப்பார். ஆயின் இப்புனித முனை கிட்லரால் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றனவே.

### நற்செய்திகள் கூறுவது

இனி ஈட்டிமுனை நிகழ்ச்சி பற்றி நற்செய்திகள் தருவதைப் பார்ப்போம். அருளப்பர் கூறுகிறார்: “யேசுநாதரிடத்தில் வந்தபோதோ அவர் ஏற்கனவே மரித்தாரென்பதைக்கண்டு அவர்கள் அவரது கணைக்காலை முறிக்கவில்லை. ஆயின் இராணுவ வீரர்களில் ஒருவன் ஈட்டியினால் அவரது விலாவைக் குத்தித் திறந்தான். அதினின்றும் இரத்தமும், தண்ணீரும் புறப்பட்டது.” சுவிசேஷகரான லூக்கா இந்த வீரர் “மெய்யாகவே இவர் ஒரு நீதிமான்” என அறிக்கையிட்டதாகவும் புனிதர் மாற்கு இந்த வீரர், “இவர் தேவகுமாரன்” என விசுவசித்ததாகவும் கூறுகின்றனர்.

### பரிவட்டத்துணியின் கூற்று

ஐந்தாவது நற்செய்தி எனப்படும் பரிவட்டத்துணியில் விஞ்ஞானிகளும், மருத்துவ நிபுணர்களும், புனித பொருளாராய்ச்சியாளர்களும் விலாக்காயத்தின் அடையாளத்திலிருந்த பகுதியை நடாத்திய பரிசோதனைகளின் பின் இந்நிகழ்ச்சிபற்றி விபரமாகக் கூறியிருக்கிறார்கள். குத்தப்பட்ட ஈட்டியின் தன்மைபற்றி அவர்கள் கூறுவதெல்லாம் இன்று காப்பாற்றப் பட்டுவரும் ஈட்டிமுனைக்குப் பொருத்தமாகவே யிருக்கிறது.

(1ஆம்கலம் பார்க்கவும்)


“இல்லாத பொருள்எல்லாம் இருக்கவே அருள்செய்தாய்
சொல்லாத அன்பே உனைத்தூண்ட இறைவா,”

திருமறைக் கலாமன்றத்தினர் பெருமையுடன் அளிக்கும்

**“அன்பில் மலர்ந்த அமர காவியம்”**
(The Divine epic of Love)

எனும் இசை, உரை நாடகச் சித்திரம் 30-3-69இல் உரும்பிராய், புனித மிக்கேல் ஆலயமுன்றிலில் பி. ப: 6-30-க்கு முன் இசையுடன் ஆரம்பமாகும்:

(விசேட பஸ்ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன)


## *அறிவித்தல்*

திருப்பலிப் புத்தகம், தூத்துக்குடி தமிழ் இலக்கியக் கழக அனுமதியுடன் இலங்கையில் உபயோகிப்பதற்கென “மக்கள் திருப்பலி” என்னும் பெயருடன் வெளிவந்துள்ளது.

இதில் தினப்பூசை, ஞாயிறு, விசேட திருநாட்களில் விசுவாசிகள் சொல்லவேண்டிய யாவும் அடங்கியுள்ளது. (Laymen's Daily Missal)

தரமான காகிதம் அளவான புத்தகம்

| | | | |
|---|---|---|---|
| விலை: | 1-ம் பாகம் | 1ரூபா 50சதம் | (திருவருகைக் காலம்) |
| | 2-ம் ,, | 1ரூபா 50சதம் | (தவக் காலம்) |
| | 3-ம் ,, | (அச்சில்) | |

கிடைக்குமிடம்: மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர்இல்லம்,
மட்டக்களப்பு

✠

“எனக்கு அறிமுகமானவர்கள், என்னை அன்போடு நேசித்தவர்கள் அனைவரதும் செபங்கள் இத்தருணம் எனக்குத் தேவை”
— புனித எப்ரேம்

## நினைவு கூருவோம்

**தொ. ம. வேதநாயகம்—மறைவின் 7-ம்ஆ ஞாபகம்**

தோற்றம்: 19-4-43 — மறைவு: 16-3-62

“மரித்தோருக்காகப் பிரார்த்திப்பது பரிசுத்தமும் பிரயோசனமுமான யோசனை.”

இரக்கமுள்ள யேசுவே, இவருடைய ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்து மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளும்.

மண்ணை விட்டு மறைந்தாலும் எம் மனக்கண்ணை விட்டுமறையாத எம் அருமைமகன் வேதநாயகம் அமரத்துவமடைந்த 7-ம் வருடம் 16-3-69இல் பூர்த்தியாகிறது. அன்று அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நெடுந்தீவு, ஆசனக்கோவிலில் ஒருதுக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக்கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், பந்துமித்திரர், விசுவாசிகள் யாபேரும் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிரிவால் துயருறும்: தொம்மை மரியாம்பிள்ளை,
மரியாம்பிள்ளை சூசானம், சகோதரர்கள்.

D 5, பரந்தன். 31—69

**பணிவிடை பெறுவதற்கல்ல, பணிவிடை புரியவே வந்தார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாவது நற்செய்தி ஏடு

கிறிஸ்துவின் போதனையை மக்களுக்கு எடுத்தோதும் நூல் சுவிசேஷம் ஆகும். சுவிசேஷம் என்பதன் கருத்து நல்லசெய்தி என்பது. நான்கு சுவிசேஷகர்கள் கிறிஸ்துவின் போதனைகளையும் அவரது வாழ்க்கை வரலாற்றையும் நற்செய்திகளாகத் தந்திருக்கின்றனர். ரியுறின் நகரிலுள்ள கிறிஸ்துவின் திருமேனித்துகிலும் அவரது பாடுகளின் வரலாற்றைச் சித்திரிக்கின்ற காரணத்தால் ஐந்தாவது நற்செய்திஏடு எனக் கூறப்படுகின்றது.

### பூமதானம் :

திருமேனித் துகில்என்பது நீண்டதொரு லினன் துணியாகும். இது 14 அடிநீளமும் 3½ அடி அகலமும் கொண்டது. கிறிஸ்துநாதரின் திருமேனியைச் சிலுவையில்நின்று இறக்கியபோது இத்துணியை நீளமாகவிரித்து அதன்மேல் கிடத்தினர். திருமேனியின் கால் துணியின் ஒருமூலையிலும் தலை துணியின் நடுப்பகுதிக்குவரும் படியாகவும் மேனி வளர்த்தப்பட்டது. பின்னர் மிகுதித் துணியை யேசுநாதரின் தலையைச்சுற்றிக் கால்வரைக்கும் இழுத்து மூடினர். மூன்று இடத்தில் துணியையும், திருமேனியையும் சேர்த்து முடிச்சுகள் இடப்பட்டு கல்லறையில் இறக்கப்பட்டது. இதுவே யூதர்கள் பிரேதங்களை அடக்கஞ்செய்யும் முறையாகும்.

### வரலாறு :

கிறிஸ்துவின் பாடுகளோடு சம்பந்தப்பட்ட பரிசுத்த பண்டங்களையெல்லாம் சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்ட புனிதை கெலன் அம்மையார் மேற்கூறிய பரிவட்டச் சீலையையும் கொன்ஸ்தாந்திநோப்பிளுக்குக் கொண்டுவந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இச்சீலையில் கிறிஸ்துவின் பிரதிபிம்பம் காணப்பட்டமையாலே இதற்குத் தனிமதிப் பளிக்கப்பட்டு வந்தது. 5ஆம் நூற்றூண்டின் சரித்திரப் போாசிரியர் கலிஸ்டாப் என்பவரும், 7ஆம் நூற்றூண்டின் புரோனியோ மேற்றிராணியாரும், 8ஆம் நூற்றூண்டின் தமியான் அருளப்பரும் இதற்குச் சாட்சிகூறியுள்ளார்கள். பின்னர் சந்தர்ப்பவசத்தால் பலஇடங்களுக்கும் யாத்திரை செய்யநேர்ந்த பரிவட்டத்துணி இறுதியாக இத்தாலிதேச ரியுறின் நகருக்குக் கொண்டுவரப்பட்டு, இன்றளவும் அங்கு பாதுகாப்பாகக் காப்பாற்றப்பட்டு வருகிறது.

### உருவ அமைப்பு :

திருமேனித்துகிலை நீளமாக விரித்தோமானல் அதில் இரு மங்கலான உருவங்களைக் காணலாம். ஒருமனிதரின் முன்பக்க பின்பக்க தோற்றங்கள் அவை. இதுதவிர வேறுசில அடையாளங்களும் துணியில் காணப்படுகின்றன. 1532இல் இத்துணி பாதுகாக்கப்பட்ட சிற்றாலயத்தில் பெருநெருப்பு மூண்டு கொண்டது. நெருப்பின் சுவாலைகள் திருமேனித்துகில் வைக்கப்பட்ட வெள்ளிப் பேழையையும் ஒருபக்கமாக உருகச்செய்தன. இதனால் சுட்டிவைக்கப்பட்டிருந்த திருமேனித் துகிலில் பன்னிரு இடங்களில் எரிகாயங்கள் ஏற்பட்டன. இப்பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏலழுகளின் கிளேயர்சபைக் கன்னியர்கள் தையலிட்டு திருமேனித் துகில் பழுதடையாமல் காப்பாற்றினர். உருவத்தின் இருபக்கங்களிலும் நீளமாக இருகோடுகள் இத்துணியில் காணப்படுகின்றன. அவை துணியை முன்னர் மடித்து வைத்தமையால் ஏற்பட்ட அடையாளங்கள் ஆகும்.

### புதுமைஅல்ல :

முற்காலத்தில் இந்த உருவ அமைப்பு எவ்விதம் ஏற்பட்டதென்பதற்கு ஒரேபதிலே கொடுக்கப்பட்டது. கிறிஸ்துநாதரின் உருவம் புதுமையாக அவரது திருமேனித்துகிலில் பதிந்திருக்கிறதென்பதே அப்பதில். இப்புதுமைபற்றிய கதையைத் தற்காலத்தில் அறிவாளர்கள் பலரும் ஏற்றுக்கொள்ள மறுப்பர். நாஸ்திகர்கள் விஞ்ஞானத்தையும், சாஸ்திரங்களையும் கொண்டுவந்து பத்தாம்பசலிக் கொள்கை என்பர். ஆயின், சுமார் 70வருடங்கட்கு முன்னர் இத்திருமேனித் துகில் புகைப்படமாகப் பிடிக்கப்பட்டதிலிருந்து கிறிஸ்துவின் திருவுருவம் இயற்கையாகவே துணியில்பதிந்துள்ளதென்பது விஞ்ஞான, புகைப்பட, புதைபொருளாராய்வு நிபுணர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாக மாறியிருக்கிறது. இதனல் நாஸ்திகரும் இவ்வுருவத்தையும், இதனோடு சம்பந்தப்பட்ட உண்மைகளையும்ஏற்றுக்கொள்வோர் ஆகினர்.

### உருவாகிய விதம் :

கிறிஸ்துநாதர் மரணத்தின் முன் மிகக்கொடிய வாதைகளை அனுபவித்தார். அவரது தேகம்முழுவதும் இரத்தவாறாக ஓடியது. மரித்தபின் அவரது தேகத்தில் வாசனைத்திரவியங்களைப்பூசி அடக்கம் செய்தனர். வாசனைத் திரவியங்களும், இரத்தமும், காயங்களும் சேர்ந்து தேகத்தில் இருந்து எழுப்பும் ஒருசக்தியே இப்பதிப்புஎன விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். பலபிரேதங்களுடன் அவர்கள் நடாத்திய ஆராய்ச்சியில் மரித்த 24-க்கும், 48 மணித்தியாலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் பிரேதத்துடன் இருந்த துணிகளில் இப்படியான உருவங்கள் பதிந்திருத்தல் கண்டுபிடிக்கப்பட்டது.

### புகைப்படம் :

1898ஆம் ஆண்டில் புகைப்பட நிபுணரொருவர் முதற்தடவையாகத் திருமேனித் துகிலைப் புகைப்படம்பிடித்தபோது பல உண்மைகள் வெளியாகின. சாதாரணமாகப் புகைப்படப் பிடிப்புக் கருவியினல் படம் பிடித்தபின் அதை இருட்டறையில் கழுவும்போது நெகடிவ் வெளியாகும். அதிலிருந்துதான் நமக்குத்தேவையான படங்களைப்பிரதிசெய்துகொள்ளலாம். திருமேனித்துகிலைப் படமெடுத்த பிலிம்சுருளைக் கழுவும்போதோ நெகடிவ் வெளிவராது படமே வெளிவந்தது. எனவே, திருமேனித்துகில் யேசுநாதரின் உடலைப் படம்பிடித்த ஒரு நெகடிவ் சுருள் என்றஉண்மை ஒப்புக்கொள்ளப்பட்டது.

### எதிர்ப்புகள் :

நல்லதொரு காரியத்துக்கு நாலாயிரம் முட்டுக்கட்டைகள் வந்துசேர்வது அதிசயமல்ல. திருமேனித் துகிலுக்கும் பலமான எதிர்ப்புக்கள் கிடைத்தன. குருமார்காசு சம்பாதிக்கச் செய்த விளையாட்டு என்றும், இரண்டாயிரம் ஆண்டுகட்கு ஒருதுணி அழியாதிருப்பது சாத்தியமல்ல என்றும், 14ஆம் நூற்றூண்டில் சிலகைதேர்ந்த சித்திரகாரரால் வரையப்பட்டதென்றும் பலவதந்திகள் கிளப்பிவிடப்பட்டன. தொல்பொருளாராய்ச்சியாளர்கள் யேசுநாதரின் காலத்துக்கு ஆயிரம்வருடங்கட்குமுன்பு தயாரிக்கப்பட்ட சிலதுணிகள் கூட இற்றைவரை அழியாதிருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். எகிப்திய பார்வோன்களின் கல்லறைகளில் கண்டெடுக்கப்பட்ட துணிகள் மிகப் பழமை வாய்ந்தவை. சித்திரகாரர் வரைந்திருந்தால் ஏன் அவர் நெகடிவ்ஆக வரைந்திருக்கவேண்டும்? என்றஇவ்வித விடைகள், இந்த வதந்திகள் ஆதாரமற்றவை என்பதை நிருபிக்கப் போதுமானவை.

### பிரபல விஞ்ஞானிகள் :

செக்குண்டோ பியோ 1898இல் படம்பிடித்தபோது படப்பிடிப்பின் நாகரீக வசதிகள்அனைத்தும் இல்லாதகாலம். மெழுகுவர்த்திகளின் உதவியுடனேயே படம்பிடித்ததாக வரலாறுகள் கூறுகின்றன. ஆயின், பின்னர் பலதடவைகளில் நவீனவசதிகளுடன் தயாரிக்கப்பட்ட பரிவட்டச்சீலையின் பிரதிமைப் படங்கள் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகட்கு மிக உதவியானவையாய் விளங்கின. போன்விக்னேன் என்ற பிரபல விஞ்ஞானி வேதவிரோதியும், நாஸ்திகரும், உலகப் பிரசித்திபெற்ற விஞ்ஞான ஆராய்ச்சியாளருமான ஈவஸ் டிலாகே என்பவருடன் நடாத்திய பரிசோதனைகள் இங்கு குறிப்பிடத்தக்கன. இந்த ஆராய்ச்சிகளில் கெரோவாட், ஹெபேட், றெனிகோல்சன் முதலிய பிரபல விஞ்ஞானிகளும் கலந்துகொண்டனர்.

### கிறிஸ்துபற்றிய விபரங்கள் :

இவர்களது அறிக்கையில் இத்துணியில் தோற்றமளிப்பவர் சந்தேகத்துக்கிடமின்றி கிறிஸ்துதான் என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. துணியில்தோன்றும் இருஉருவங்களும் ஒருவருடையதே. அவை 5 அடி 11 அங்குல உயரமுள்ள யூதகுல கம்பீரத் தோற்றமுள்ள, சாந்தகுணமுள்ள, கவ

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

— சாமுவேல் பெனடிக்ற் —

## யாத்திரை

ஒன்றுய் இருந்தோம் உங்களைநான் விட்டுவிட்டுச்
சென்றேகும் நேரமிது சிலவார்த்தை கேளுங்கள்

வெறுங்கை தனைவீசி வேகமுடன் செல்லுகையில்
குறும்புச் சிரிப்பொலியும் கொக்கரிப்பும் கேட்கின்றேன்

காணிபொருள் எங்கே? காசு திரவியங்கள்
பேணிப் புரந்திட்ட பெருமைகளை ஏன்விட்டாய் ?

உனது உனதென்று உரத்துக் கதைத்தாயே
மனதும் கல்லாச்சோ ? மௌனம் ஏன்ஐயா ?

நேற்றிருந்தா யுன்பிரிவால் நெஞ்சில் அறைந்தவர்கள்
சோற்றின் சுமையாலே சோர்ந்து துயில்கின்றுர்

ஓடிஓடி ஒரு நொடியும் போக்காது
வாடி உழைத்தவனே வரும்படியைத் திரும்பிப்பார்

உண்ண உடுக்க உறங்க நினைவின்றி
எண்ணிப் படைத்தாயே எங்கே? அவையெல்லாம் ?

இவைபோல எத்தனையோ ஈட்டிகளாய் ஏளனங்கள்
வகைவகையாய்ச் சுற்றிஎனை வதைத்திட நான்செல்லுகிறேன்

எல்லையது காணுத ஏகாந்தப் பெருவெளியில்
செல்லும் எனைப்பார்த்துச் சிரிக்காதீர் மாநிலத்தீர்

ஒன்றுய் இருந்தோம் உங்களைநான் விட்டுவிட்டுச்
சென்றேகும் நேரமிது சிறிதிரக்கம் காட்டுங்கள்

— யாழ்: ஜெயம்

## உருளும்  உலகிலே

● சந்திரனில் மனிதன் இறங்குதற்கான இடங்களைப் பற்றித் திட்டவட்டமாக ஆராயுமுகமாகவே அப்பொலோ-9எனும் விண்வெளிக்கப்பல் வானவெளிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதில்வெற்றி கிட்டுமிடத்து இவ்வாண்டின் இறுதியிலே சந்திரனில் மனிதனை இறக்குமாறு நான்கு விண்வெளிவீரர்களை அமெரிக்கா வானவெளிக்கு அனுப்பி வைக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

● சந்திரனில் போக்குவரத்துச் செய்யத்தகுந்த ஜீப் வண்டிகள் தற்பொழுது அமெரிக்காவில்உருவாக்கப் படுகின்றனவாம். ஜோன் ஹட்ஜ்என்ற பிரித்தானியர் இதற்குப் பொறுப்பாளியாக இருந்து வருவதாகவும், சந்திரனின் மேற்பரப்பிலுள்ள பள்ளங்களைத் தாண்டிக் கடக்கக்கூடிய தாவுதடிகள் அங்கு செய்யப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

● உலகின் அதிகம்நவீனமான "கொன்கோட்" என்ற இராட்சத ஜெற்விமானம் ஒன்று பிரான்சிலே கட்டப்பட்டிருக்கிறது. இது மணித்தியாலம் 1,400மைல்வேகத்தில் பறக்கக்கூடியது. 144 பிரயாணிகளை ஏற்றிச்செல்லக்கூடிய சக்திவாய்ந்தது. இது தனது வெள்ளோட்டத்தை 28நிமிஷம்வரைநடத்தி வெற்றிகரமாக முடித்திருக்கிறது.

● ஆபிரிக்காவில் அதிகம் உயரமான—அதாவது 19,440 அடிஉயரமுள்ள கிளிமான்சரோ மலைச்சிகரத்தில் ஏற முயன்ற ஆபிரிக்கருடர்கள் எண்மரும் கஷ்டமின்றியே முதல்10,000அடியும், பின்னர் பெரும்கஷ்டத்துடன் 7,500 அடிவரையிலும் அதில்ஏறிவிட்டு இன்னும்1,000அடியே ஏறவிருக்கும்போது தங்கள் முயற்சியைக் கைவிட்டுக் கீழேயிறங்கியதாகக் கெனியாவிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது.

● 'அப்பொலோ-9' என்ற அமெரிக்க விண்வெளிக்கப்பல் ஜேம்ஸ் மைக்டிவின், டேவிட் ஸ்கொட், றசெல் சுவெக்மாட், எனும் மூன்று விண்வெளி வீரர்களுடன் சென்ற3ஆம் திகதிஇரவு வானவெளிக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கிறது. மூவரும் தங்களுடைய பத்துநாள் விண்வெளிப் பிரயாணத்தின்போது சந்திரனில் முதலாவதுமனிதன் இறங்குவதற்கானவழியை வகுத்துத் திரும்புவார்களாம்.

● அமெரிக்க புதியஜனதிபதி திரு. நிக்சன் அவர்கள் சென்ற2ஆம்திகதி வத்திக்கான் மாளிகைசென்று பாப்பரசரைச் சந்தித்ததோடு பாப்பரசர்ஒருவரைச்சந்தித்த ஐந்தாவது அமெரிக்கஜனதிபதி இவராவர். தனிப்பட்ட ஒரு அமெரிக்கபிரஜை என்றமட்டிலே, திரு. நிக்சன் சின்னப்பபாப்பரசரை ஏற்கனவே மும்முறை சந்தித்திருக்கின்றுர்.

● 'அப்பொலோ' -9,என்ற விண்வெளிக்கப்பலை மனிதன் சந்திரனில் இறங்கும் ஆராய்ச்சிக்கென விண்வெளிக்கு அனுப்பியிருக்கும் இந்தவேளை அமெரிக்கா செவ்வாய்க்கிரகத்திற்கும் 'மறினேர்'என்ற விண்வெளிக் கப்பல்ஒன்றை அனுப்பியிருக்கிறது. இந்தவான வெளிக்கப்பல் பூமியிலிருந்து 22கோடியே 60லட்சம்மைல் தூரத்திலுள்ள செவ்வாய்க் கிரகத்தைப் போய்ச்சேர ஐந்துமாதங்கள்செல்லும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Christianity—Advanced Level (G. E. C.)

# இரட்சணிய சரித்திரம்

## திட்டத்தின் ஆரம்பம்

( தமிழாக்கம்: சிஸ்றர் அன்ரனி யோசவ் )

### பகுதி II

யூதர்களைத் தேவன் தமது ஜனங்களாகத் தெரிந்தெடுத்த சம்பவம் வியப்பிற்குரியது. யூதர்மாத்திரமல்ல, வேறு இனத்தினர்கூட அவருக்குத் தேவைப்பட்டனர் என்பதையிட்டு நாம் ஆச்சரியப்படக்கூடும். தேவன் யாரென்பதை நாம் மறந்துவிடுவதே இத்தகைய ஆச்சரியத்துக்குக் காரணம். தேவன் யாரென்பதை யூதர்கள் மறக்கவில்லை. அவர்கள் அந்நிய தேசத்தாரின் பாவ தோஷங்களில் அமிழ்ந்திருந்தவேளைகளைத் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் இறைவனது செயல், அவரது மகத்துவத்தை அவர்களுக்கு எடுத்துக் காட்டியது. ஜீவனுடைய யாவும் அவருடையவை; அவரே அவைகளைச் சிருட்டித்தாரென்றும், உலகத்தை ஒழுங்குபடுத்தினுரென்றும் அவர்கள் அறிந்திருந்தனர். அவர் தூரத்திலிருக்கும் பெரியாரென்றும், அவரைப் பற்றிக் கரிசனைகொள்ளத் தேவையில்லையென்றும், சில வேளைகளில் மாத்திரம் அவருக்கு வணக்கஞ் செலுத்த வேண்டுமென்றும் அவர்கள் எண்ணவில்லை. தேவன் உலகத்தைப் படைத்து அதை ஆண்டு நடத்துகிருரென்பது அவர்களது மனதிற் பட்ட பேருண்மையாகும். அவர்கள் அவருடைய சிருட்டிகள். அவர்கள் செல்வாக்கும், கீர்த்தியும், மகிமையும் பெற்றிருக்கலாம். அந்நிலைமையைச் சில சமயங்களில் அவர்கள் அடைந்து பெரிதும் பேருவகை கொண்டனர். வெளியாங்க ஆடம்பரங்களையும் பகட்டையும் விரும்பினர். ஆனுல், தங்களுடைய மகிமையுடன் தேவனுடைய மகிமையை ஒப்பிட்டபோது அது மேட்டுக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாட்டைப் போன்றதென உணர்ந்து கொண்டனர். தமது வெற்றிகளும், தமக்குள்ள யாவும் அவருடைய கொடைகள் எனக் கண்டனர். அணு என்ருல் என்ன என்று அவர்கள் அறியாது இருந்திருக்கலாம். ஆனுல், மனிதன் தேவனுற் சிருட்டிக்கப்பட்டவன் என்பதை அறிந்திருந்தனர். மேலும் மனிதனைப் படைத்த இறைவன் அவனுக்கு ஓர் இலட்சியத்தைக் கொடுக்காது விடவில்லை என்றும், அவன் இவ்வுலகில் ஓர் இலட்சியத்துக்காகவே வாழ்கிருன் என்றும் உணர்ந்தனர். தேவனைப்பற்றிய இவ்வித நுண்ணறிவு யூதர்களிடமிருந்தது. இராக்காலத்தில் வானத்தை அண்ணார்ந்துபார்த்த யூத கவிஞனெருவன் "தேவனே! என் ஆண்டவனே! உமது வல்லபம்தானென்னே! அதை முழு உலகத்திலுங் காண்கின்ருேமே. உமது கரத்தின் சிருட்டிப்பை இதோ வான மண்டலங்களிற் காண்கின்றேன். சந்திரனையும், தாரகைகளையும் நீரே படைத்தவர். நீர் மனிதனைப்பற்றிச் சிந்திப்பதற்கு அவன் யார்? என்கிருர். தேவனுடைய வல்லமையானது சில வேளைகளிற் சகலத்தின்மேலும் ஆட்சிபுரிகின்றதென யூதர் எண்ணினர். அவருடைய பார்வையின்கீழ் யாவும் அவருடைய வல்லபத்திற்கடங்கியவையாயிருந்தன. தேவன் இல்லாத இடமேயில்லை.

"நான் வானமண்டலங்களில் ஏறுவேனுகில் நீர் அங்கே இருக்கிறீர். பாதாளத்தை எனது படுக்கையாக்குவேனுகில் நீர் அங்கும் இருப்பீர். விடியற்காலையிற் சிறகடித்துப்பறப்பேனுகில் அன்றேல் மேற்கின் எல்லையை நோக்கிப் போவேனுகில் அங்கே உமது கரம் என்னைப் பற்றிக்கொள்ளும். உமது வலதுகரம் என்னைப் பற்றி இழுக்கும். "இருளானது என்னை மூடாதோ, இரவானது என்னை மறைக்காதோ? என நான் கூறினுல் இருளும் உமக்கு இருளல்லவே; இரவும் பட்டப்பகலாய்ப் பிரகாசிக்குமே." தேவன் இத்தகையவர் ஆனுல், அவர் என்ன செய்தார்? மனிதன் மூலமாக யாது செய்தார்? தேவன் மனிதனுக்கெனத் திட்டம் ஒன்றை வகுத்திருந்தார் என்பதை அறிவோம். தமது உன்னத அதிகாரத்தை, அழகைத் தனிமையில் அனுபவிக்க அவர் விரும்பவில்லை. தனக்கும் மனிதனுக்குமிடையிலிருந்த பாதாளத்தைக் கடக்க எண்ணினுர். அவர் கையாண்ட வழிவகைகள் கவர்ச்சிகரமானவை. மனிதன் படிப்படியாகவே அபிவிருத்தியடைய வேண்டுமென்பதே அவரது திட்டம். தேவன் தன்னிடம் வருவதற்குக் காட்டிய குறுகிய பாதையை ஆதாம் தன் சந்ததியின்போரால் ஏற்க மறுத்தபின், மனிதன் படிப்படியாக முன்னேறித் தேவன் வகுத்த திட்டத்தில் ஒரு பங்கெடுக்க வேண்டுமென்று இறைவன் திருவுளங்கொண்டார். எனினும், இப்பங்கானது மெல்லமெல்லமாகவும், துன்பகரமானதுமாகவே ஆரம்பித்தது. இயற்கையான, மறைமுகமான வழிகளாற்ருன் ஆதியிலே தேவன் மனிதன்மீது கரிசனைகாட்டினுர். தகுந்த காலம் வந்ததும் நேரடியாகச் செயலாற்றத் தொடங்கினுர்.

எகிப்துதேசத்திலே அடிமைகளான ஒரு நாடோடிச் சாதியினர் இருந்தனர். தமது எசமானரின் கொடுமையின்கீழே இவர்கள் பரிதாபகரமான வாழ்க்கையை நடாத்திவந்தனர். இச்சாதியினரைக் காப்பாற்றி எகிப்திலிருந்து அராபியாவுக்குக் கொண்டு வந்து, அதுமுதல் அவர்கள் தமது மக்களாயிருப்பார்களென்று இறைவன் வாக்களித்தார். அவர்களைப் பாதுகாப்பதாகவும், அவர்களுக்குச் சொந்தமாக ஒரு பூமியைக் கொடுப்பதாகவும் வாக்குப்பண்ணி, அதற்கீடாக அவர்கள் தம்மைமாத்திரமே தேவனுக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், தமக்குமாத்திரமே கீழ்ப்படிய வேண்டுமென்றுங் கட்டளையிட்டார். சன்மார்க்க நெறியைக் காண்பித்துத் தாம் அவர்கள்மீது கொண்டுள்ள அதிகாரத்தை அறிக்கையிடுவதற்கு அவர்கட்குச் சில சட்டங்களையும் விதித்தார். தேவனுக்கும் இச்சாதியினர்க்குமிடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இதுவே எதிர்காலத்திற் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே நிலவப்போகும் உறவின் ஊற்றுயமைந்தது. மீட்பும், அம்மீட்பை முத்திரையிட்ட உடன்படிக்கையுமே அவ்வூற்ருகும். மேலும் தேவனுக்கும் மனிதனுக்குமிடையே ஏற்பட்ட இவ்வுடன்படிக்கையை நாம் நன்கு அறிவது அவசியம். ஏனெனில், அன்று அவர் பிரயோகித்த முறையையே இன்றுங் கையாளுகிருர். தமது உடன்படிக்கையைச் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினைத் தெரிந்துகொண்டார். இவ்வுடன்படிக்கையானது தேவன் தமது மக்களை நேசிக்கிருரென்பதை வெளிப்படுத்தியது. இம்மக்கள் இதற்கு அபாத்திரராயினும், தேவனது வல்லபத்தைத் தமக்குச் சாதகமாகப் பெற்றுக்கொண்டனர். இதற்குப் பிரதிநன்றியாக அவர்கள் செயல்முறையிற் தம்மை இறைமக்களாகக் காட்ட வேண்டியிருந்தது. பெற்ருேர் தமது பிள்ளைகளை வழி நடத்துவது போல, இவர்களும் தேவனுல் வழிநடத்தப்பட விரும்பவேண்டும். இவ்விதம் யூதர் [illegible]

தப்படுத்தப்படுவதனாலேயே இவர்கள் இவ்வுலகத்தில் விளங்கமுடியாத நன்மைகளைப் பெற்றுக்கொள்வர் — விசேஷமாக இவர்கள் ஒரேயொரு தேவனை ஆராதிக்கவேண்டும். அவரிடமிருந்தே சகலமும் வருகின்றனவென்று இவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இவர்கள் தேவனுல் உருவாக்கப்படுபவர்கள். என்ருலும், மோயீசன்போன்ற தலைவர்கள் மூலமே தேவன் அவர்களை வழிநடத்தினுர்.

[வளரும்]

# மகளிர் மன்றம்

அன்புடை நேயர்களே வணக்கம்!......

இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் எப்பொழுதும் காரியாலயத்திலிருந்து வீடு செல்லும்போது வழியிலுள்ள வியாகுலமாதா சொரூபத்தண்டை சென்று உருக்கமாக ஜெபிப்பது வழக்கம். ஒரு நாள் சகநண்பர்களின் துராலோசனைகளின் விளைவாக அவன் தாசியொருத்தியின் வீடு சென்ருன். மாலை வேளைக் கேளிக்கைகளின்பின் சிற்றின்ப போதையிலே வீடு திரும்பிக்கொண்டிருந்தான். பழக்கத்தின் விளைவாக மாதா பாதத்தில் மண்டியிட்டான். வழமையான செபங்களை ஓதிக் கொண்டே வியாகுல அன்னையின் சொரூபத்தை ஏறிட்டு நோக்கினுன்: ஆ!...அதிசயமே!... அன்னையின் இதயத்தில் ஊடுருவியிருந்த ஏழு வாட்களுக்குப் பதில் அன்று எட்டுவாட்கள் இருப்பதைக் கண்டான்: ஆச்சரிய வசத்தனுகிய அவன் செவியில், "மகனே!...நீசெய்ததைப் பார்" என்ற குரலொலி கேட்டது: திடுக்கிட்டான்: தன் காம இச்சையே அன்னையின் இதயத்தைப் பயங்கர வாளாக ஊடுருவியதென அறிந்தான். மனஸ்தாபக் கண்ணீர் வடித்தான்: நேரே ஆலயஞ்சென்று பாவப் பொறுத்தல் அடைந்துகொண்டே வீடு திரும்பினுன். அன்பர்களே!......தபசுகாலமிது. வியாகுல அன்னையின் இதயத்தில் நாம் எத்தனை வாட்களை ஊடுருவியிருக்கிருேமோ? தபஞ்செய்து மனஸ்தாபப்பட்டு அவளுக்கும் அவள் திருமகனுக்கும் ஆறுதலளிக்க முன்வருவோம்

நிற்க! எனது பிரியதந்தையார் இறைபதம் எய்தியதை முன்னிட்டு மகளிர் மன்ற சார்பாக தமது ஆழ்ந்த அனுதாபங்களை அனுப்பிவைத்த மகளிர்மன்ற ரசிகர்கட்கும், காவலனின் சக எழுத்தாளர்கட்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரோஜா.

## யார்....யார்....?....யாரோ ?....

அன்னை தந்தையுலகினிலே கண்கண்ட தெய்வம்!......
அன்னை தந்தையிறந்து விட்டால் யாரையப்பா தெய்வம்?......
என்றும் எழிற்கருணையுடை இறைவா நீயன்ருே
எந்நாளும் விழிப்புடனே எமைக் காக்கும் தெய்வம்!......

*!

கல்விதந்த ஆசிரியர் கண்கண்ட தெய்வம்!......
கல்விச்சாலை கடந்துவிட்டால் யாரையப்பா தெய்வம்?......
நல்வழியில் எமை நடத்தும் நாதன் நீயன்ருே
நல்லோர்கள் ஒளிவிளக்காய்ப் போற்றுகின்ற தெய்வம்!......

*

தையலர்க்குத் தாலிதந்த கணவனெருதெய்வம்!......
தரணியிலே இழந்துவிட்டால் யாரையப்பா தெய்வம்?......
பொய்மையின்றி ஆட்கொள்ளும் புனிதன் நீயன்ருே
பூவையர்கள் காவலனும் பொற்புடைய தெய்வம்!......

*

செங்கோலை ஏந்துகின்ற அரசனெருதெய்வம்!......
சிரமிழந்தே மாறிவிட்டால் யாரையப்பா தெய்வம்?......
பங்கமிலா விண்ணுலகக் கோவே நீயன்ருே
பாரினிலே எமையாளும் பரிசுத்த தெய்வம்!......

*

தெய்வநெறி எடுத்துரைக்கும் குரவரொரு தெய்வம்!......
தென்பூட்ட வகையில்லையேல் யாரையப்பா தெய்வம்?...
வையகத்தில் இடர்களையும் வளனே நீயன்ருே
வாழும்வரை புரந்தெமக்கு வழிகாட்டும் தெய்வம்!......

*

அன்னைதந்தை, ஆசிரியர், அரசனுடன் குருவும்
அரிவையர்க்குக் கணவனுமே கண்கண்ட தெய்வம்!......
அனைவருமே மறைந்துவிட்டால் யாரையப்பா தெய்வம்?......
அணுவினையும் காக்கின்ற கண்காணுத் தெய்வம்!......

## நாட்பலிபூசை காண்பதனுலே!......

1. இறைவனுக்கு அதிமிக மேலான ஆராதனையைச் செலுத்துகின்ருேம்.

2. இறைவன் நம்மேல் பொழிந்தருளும் அளப்பரிய நன்மைகட்காக தகுந்த முறையில் நன்றி செலுத்துகிருேம்.

3. நாம் விரும்பிக்கேட்கும் இகபர நன்மைகள் அனைத்தையும் அடைந்து கொள்கிருேம்.

4. உத்தரிப்புஸ்தலத்தில் எம்முடையவும், பிறருடையவும் உத்தரிப்புக் காலத்தைக் குறைத்துக் கொள்கின்ருேம்.

5. எமக்கு அன்றையதினம் நேரிடக்கூடிய ஆன்மீக, சரீர, ஆபத்துக்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்கிருேம்.

6. எமது ஆன்மாவின் அருளுயிரை அதிகரித்துக் கொள்கின்ருேம்.

7. நாம் எத்தனை பலிபூசைகளை ஒப்புக் கொடுத்துள்ளோமோ அத்துணை ஆறுதலை எமது மரணவேளையில் அடைந்து கொள்கின்ருேம்.


8. நாம் ஒப்புக் கொடுத்த ஒவ்வொரு பலிபூசையையும் எமது தனித்தீர்வை வேளையில் எமக்காக மன்னிப்பை இரந்துநிற்கும் சாதனமாக்கிக் கொள்கிருேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித வளனுர் வாழ்க்கை நெறி

உழைத்துண்டு வாழ்வது இழிவென்று எண்ணுவோரும், தொழுதுண்டு வாழ்நாளை வீணுக்குவோரும் பெருகி வருகின்றனர். மற்ருேர் புறத்தில் பொருள்மேல் பற்றுக்கொண்டு, ஆண்டவனை மறந்து, அறநெறி பிறழ்ந்து, அனைத்தும் தமக்கென அவாவுவோரும், உற்ருர், உடன்பிறந்தார் தானும் உணவின்றி மெலிய, தாம் உண்டு உடுத்து உல்லாசமாக வாழ்வோரும் மலிந்துள்ளனர்.

உழைப்பவர் குறைவதால் நாடு வளமிழந்து, பிறநாடுகளின் தயவை நாடும் இழிநிலைக்கு உள்ளாகிறது. கொடுப்பவர் சிலராவதால் வாழ்க்கை நலமற்றோர் நன்னெறி நீங்கி தீவினை புரிகின்றனர். அறச்செயல் அருக மறச்செயல் பெருகி வருகின்றது. இந்நிலை



நீக்க புனித வளனுர் வாழ்க்கை நெறி ஓர் உயர்ந்த எடுத்துக் காட்டாகும்.

தேன் சிந்தும் தேம்பாவணிக் காவியத்தை இயற்றிய தீந்தமிழ்ச் செல்வர், தவமறைச் சான்ருேர் வீரமாமுனிவர் புனிதவளனுர் வாழ்க்கை நெறியை ஒரு பாடலால் எழில்படக் காட்டுகிருர்.

புன்மைப் பட்டார் கொண்ட்வை
வெஃகிப் பொருள் கொண்ட்
தன்மைப் பட்டார் யாவையும்
உண்ணுர்; தரல் செய்யார்;
இன்மைப் பட்டான் சூசை
உழைத்தே இனிதுண்பான்;
நன்மைப் பட்டார்ந் தேற்குநர்
உய்ய நனியீவான்.

இழி பண்புடையோரான செல்வர் பொருள் மிகப் பெற்ருலும் அதன் பயனை அடையார். செலவு செய்தால் பொருள் குறையுமே என்று அஞ்சி தாமும் உண்ணுர், இரப்போர்க்கும் ஈயரர். புனித சூசைவளன் எளிமையை விரும்பி வறுமையில் வாழ்ந்தவர். எனினும் உழைத்து உண்பார்; வாழ்க்கை நலமற்ருேர்க்கு, அவர்கள் நன்னெறி விட்டுத் தீயவழி செல்லாதிருக்கப் பொருள் கொடுத்து வாழ்வை வளம் படுத்துவர்.

இட்டுண்டு வாழ்ந்த இச்செம்மனத்தோரையே இறைவனும், ஊனுடல் எடுத்து உலகில் பிறந்த தம் மைந்தன் கிறிஸ்துவுக்கும், அவரை மானிலத்திற்கு மகவாய் அளித்த மாமரிக்கும், காவலரும் துணைவருமாக்கினுர். 'நீதிமான்' என நற்செய்தி புகழும் புனித வளனைத்தாய்த் திருச்சபையும் பங்குனித்திங்களின் புனிதரெனப்போற்றி 19ஆம் நாள் விழாவும் கொண்டாடுகிறது. நாமும் புனித வளனுர் வாழ்க்கை நெறியை நமதாக்கி நானிலம் வாழ நற்பணி புரிவோம். அவரின் இவ்வுயர் நெறி உலகப் பொது நெறியாய் விளங்க அவரை இரந்து மன்ருடுவோம்.

வாழ்க வளன்—நெறி வளர்க திருமறை.

ம. யேசுதாசன்
மறை ஆசிரியன்.

அடுத்தவாரம்
எதிர்பாருங்கள்
**திருமேனித் துகிலில் இருந்து அறியக்கூடிய கிறிஸ்துநாதரின் திருப்பாடுகளின் விபரங்கள்**

# சிந்தித்துச் செயலாற்றுக

## தபசுகாலமும் நாமும்

— A. ராஜ் —

தபசு காலம் தபத்தின் காலம் மாத்திரமன்று. ஆனுல், வாழ்வினைத் திருத்தி, மாற்றி அமைக்கும் காலமும் கூட. ஒரு படகின் சுக்கான் அலை, காற்று முதலியவற்றிற்கு ஏற்ற வாறு படகைச் செலுத்துவது போல் தபசு காலமும் மனிதனுடைய பாவ நாட்டங்களை விலக்கிப் படகாகிய வாழ்க்கையை நல்ல, குறையற்ற, பூரணமான, கடவுளுக்குகந்த பாதையில் அவனைக் கொண்டுசெல்லுகின்றது. இந்த மார்க்கம் எந்த மதத்தவனும் கடைப்பிடிக்க வேண்டிய மார்க்கம். அப்படியானுல், கிறீஸ்தவன்! கிறீஸ்துவைப் பின்பற்றுபவன்! ஆம். அவர்கள் திறமையான, பிறருக்கு முன்மாதிரிகையான கிறீஸ்துவ வாழ்வு வாழவேண்டும். அதற்கு:

1. **நாம் எதை விலக்கவேண்டும்?**

பாவம் — முக்கியமாய்ச் சாவான பாவம்.

ஒரு பொழுதும் நான் மனத்திலும் கூடச் சாவான பாவத்துடன் படுக்கைக்குச் செல்லமாட்டேன்.

"சர்ப்பத்தைக் கண்டு ஓடுவதுபோல, பாவத்தினின்று ஓடு" — சர்வப்பிரசங்கி.

2. பாவத்துக்கு எம்மை **நடத்திச்செல்பவை:**

(அ) சோம்பல்: அது பாவச் சோதனைகளின் காரண கர்த்தாவும், துன்மார்க்கம் அல்லது கெட்ட செயல்களின் தாய்.

(ஆ) கெட்ட புத்தகங்களும், தோழர்களும்:

"ஞானிகளோடு சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்; மூடர்க்குத் தோழனே நாசமடைவான்" — நீதி. xiv. 20.

"என் வாழ்க்கையில் பெரும் இன்பத்தை நல்ல புத்தகங்களை வாசிப்பதின்மூலம் அடைந்தேன்" —அவிலா திரேசா.

(இ) நாம் கிறிஸ்தவர் என்பதை ஏற்றுக்கொள்ள நாணி மறுப்பது போலி மரியாதை:

"மனிதர் முன்பாக என்னை மறுதலிப்பவன் எவனே, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்"

— மத். x. 33.

3. நாம் நல்ல சீவியம் சீவிக்க **எதை மேற்கொள்ளவேண்டும்?**

செபி. ஆத்துமத்தில் அனேக அருள்களைப் பொழிவதற்குச் செபமே காரணம்.

"நீங்கள் என் நாமத்தினுல் எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்பொருட்டு நான் அதைச் செய்தருளுவேன்" — அரு. xiv. 13.

ஆகவே, சகோதரர்களே! தபசுகாலம்தொடங்கி அனேக நாட்களாகவில்லை. மேற்கூறியவைகளைக் கடைப்பிடித்துக் கிறீஸ்துவின் உத்தானத்திற்குச் சாட்சிகளாவோம். சாட்சிகளாய் மாத்திரமன்று, அவரின் இன்பத்தில் மிதப்போம். அதற்கு இன்னும் முக்கியமானது தியாகம். கிறீஸ்து எமக்காகத் தனது சரீரத்தை மாத்திரமன்று, ஆத்துமத்தையே அர்ப்பணித்து எம்மை மீட்டார். இவ்வுலகில் என்றுமுதியாத தியாகசீலர் யேசு பெருமான். எங்கள் மீட்பில் அவர் இன்பங் கண்டார்.

"இன்பத்தின் இரகசியம் தியாகத்தில்தான் அடங்கியுள்ளது" என்ருர் கார்னேஜி.

# ஒல்லாந்தில் கத்தோலிக்க திருச்சபை

(இக்கடிதம் இங்கிலாந்து தேசத்தில் வெளிவரும் யூனிவெர்ஸ் பத்திரிகை ஆசிரியருக்குக்கிடைத்தது.)

ஒல்லாந்து தேசத்தில் கத்தோலிக்கசமயத்தின் நிலைமை பற்றி பலரும் எழுதிவருகிருர்கள். இவர்கள் உண்மையில் அத்தேசத்துக்கு இந்நாட்களில் ஒருமுறையாவது போய் வந்தவர்களா? நேரிற் கண்டதை எழுதுகிருர்களா? இவர்களிற் சிலர் எழுதுவதிலிருந்து அத்தேசத்தில் பெரும்பாலான கத்தோலிக்கர்கள் தங்கள் சமயத்தைக்கைவிடும் நிலைமையில் இருப்பதாக விளங்கிக்கொள்ள இருக்கிறது; நிலைமை அங்கே அப்படியில்லை. நான் அத்தேசத்துக்கு எனது வேலையின் நிமித்தம் சென்றுவருகிறேன். சென்ற வாரமும் சென்று வந்தேன். அங்கே கத்தோலிக்ககோவில் விசுவாசிகளால் தேம்பிவழிகின்றன. கோவிலுக்குச் செல்பவருள் 90சதவீதம் திவ்வியநன்மை பெறுவதை பலமுறையும் கண்டிருக்கிறேன். அப்படியாயின் சமயத்தை இவர்கள் புறக்கணிப்பவரா? இதை நன்ருக ஆராய்வதன்முன் விசுவசிக்கவேண்டாம்.

திருமதி பணியன்
(அயில்ஸ்பெரி)

# கருதினலின் ராஜினமா

ஜேர்மனி, கொலோன் நகரத்தின் அதிமேற்றிராணியாராகப் பல வருடங்கள் சேவைசெய்த கருதினல் யோசவ் பிறிங்ஸ் சுகயீனங் காரணமாகத் தமது கருதினல் பதவியிலிருந்து நீங்க விருப்பம் தெரிவித்ததைப் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் ஏற்றுக்கொண்டார்.

# பாப்பரசருக்கு

## நாட்டியப்பொம்மையும் மாணவர் தொப்பியும்

— வத்திகக்ான்

அண்மையில் யப்பானிய கலாசாலை மாணவர் குழு ஒன்று பரிசுத்த தந்தையைப் பேட்டிகண்டபொழுது அவருக்குத் தங்கள் அன்பு விஜயத்தின் ஞாபகார்த்தமாக ஒரு யப்பானிய நாட்டியப் பொம்மையையும், மாணவர் தொப்பியையும் கொடுத்தனர்.

# ஐந்தாவது...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லையற்ற, அஞ்சாநெஞ்சங் கொண்ட ஒருவருடையவை. அவர் மிகக் கடினமான தண்டனைகளை அனுபவித்துள்ளார். துணியில்தோன்றும்சவுக்கடிக் காயங்கள், விலாக்காயங்கள், தோள்முட்டுக்காயங்கள், தலையில் முள்பதிந்த காயங்கள், கன்னங்களில் அடிபட்ட தழும்புகள், கைகால்களில் உள்ள ஆணிக்காயங்கள், அடக்கஞ் செய்யப்பட்டமுறை இவற்றிலிருந்து ஆராயுமிடத்து இந்தத்துணியில் குறிப்பிடப்படுபவர் கிறிஸ்துநாதரே என்பதை அந்த அறிக்கை விபரமாகத் தெரிவிக்கிறது. இந்தத்துணியைப் பிரசித்திபெற்ற மருத்துவ நிபுணர்களும் ஆராய்ந்தனர். கிறிஸ்துநாதர் அனுபவித்த பயங்கர தண்டனைகளையும், பாடுகளையும் அவர்கள் தங்கள் ஆராய்ச்சிகளிலிருந்து விபரித்தனர்.

**பாப்பரசரின் அறிக்கை:**

11ஆம் பத்திநாத பாப்பரசர் தமது உயர்ஆலோசக நிபுணர்களுடன் 5வருடங்களாகப் பரிவட்டத்துணியைப் பிரதிபிம்பிக்கும் புகைப்படங்களையும், வைத்திய, விஞ்ஞான, தொல்பொருளாராய்வு, பைபிள் நிபுணர்களின் அறிக்கைகளையும் மிக நுணுக்கமாக அலசிஆராய்ந்தார். இறுதியாக 1936 புரட்டாதி 25-ல் வெளியிட்ட ஒரு சுற்றறிக்கையில் திருமேனித்துகிலின் வெயீடுகளைக் கிறிஸ்தவர்கள் ஏற்றுக்கொள்ளலாமெனத் தெரிவித்தார். கிறிஸ்துநாதரின் பாடுகளை விளக்கும் இந்த ஐந்தாவது நற்செய்தி ஏட்டின்சாராகச் சொல்லப்படும் செபம் ஒன்றுக்கும் 500 நாட்பலனை அருளியிருக்கிருர்.

சாமுவேல் பெனடிக்ற்

வாழ்வு எப்படியோ, சாவும் அப்படியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி
### பங்குனி — 1969

| | | | |
|---|---|---|---|
| 16 | ஞாயிறு | தவக்கால 4-ம் ஞாயிறு | [ஊ] |
| 17 | திங்கள் | கிழமைப் பூசை | [ஊ] |
| 18 | செவ்வாய் | கிழமைப் பூசை | [ஊ] |
| 19 | புதன் | புனித சூசையப்பர் | [வெ] |
| 20 | வியாழன் | கிழமைப் பூசை | [ஊ] |
| 21 | வெள்ளி | கிழமைப் பூசை | [ஊ] |
| 22 | சனி | கிழமைப் பூசை | [ஊ] |

# காவலன் கருத்து

## சூசையப்பர் காட்டும் வழி

பங்குனிமாதம் திருச்சபையின் மாபெரும் புனிதரும், சுவிசேஷத்தின் அமைதியும், அடக்கமும் வாய்ந்த மனிதருமான அர்ச். சூசையப்பரை எம் கருத்தில் நிறுத்துகின்றது. அவருடைய தன்மைகளுளெல்லாம் ஓங்கிநிற்பது அவரது விசுவாசமேயாம். என்றும் பின்னணியிலேயே நின்ற இப்பெரிய புனிதரின் நிறைவான விசுவாசம் அவரது செய்கைகளிளெல்லாம் பிரதிபலிக்கிறது. எவ்வித இன்னல் வந்தபோதும் அவரது விசுவாசம் தளர்ந்ததில்லை.

அவரிடம் காணப்படும் மற்ருெரு பண்பு அவரது தாழ்மையாகும். திருக்குடும்பத்துக்குத் தலைவராக விளங்கிய போதிலும் தாம் யேசுவையும், மரியாயையும்விடத் தாழ்ந்தவர் என்பதை உணர்ந்த அவர் அவர்களுடைய வாழ்வுக்குப் பின்னணியாக நின்று பணிபுரிவதையே தம் இலட்சியமாகக் கொண்டார்.

சுயமகிமையை முற்ருக அழிக்கும் இத்தகைய தாழ்மை கவர்ச்சிகரமா யிருப்பதில்லை. தேவனோடு மறைந்து வாழ்வது தமது வாழ்நாளை வீணுக்குவதாக உலகத்தாருக்குப்படுகிறது. பயன்படுத்துவதற்காகத் தானே தேவன் பல கொடைகளைத் தந்திருக்கிருர் என அவர்கள் வாதிடுகின்றனர். அக்கொடைகளைத் தேவனின் மகிமையைவிட தம் சொந்த மகிமைக்காகவே பயன்படுத்துகின்றனர். ஆனுல், தாழ்மையின் வழியே புனிதத்துவத்தின் வழி என்பதற்கையமில்லை. உலக காரியங்களில் தன்னும், தன்னை முன்னுக்குத் தள்ள முயல்பவனிலும் பார்க்க, அமைதியும் அடக்கமும் உள்ளவன் மேலானவனுகக் கருதப்படுகிருன். சூசையப்பரின் இந்த எளிமையும், அடக்கமும் அவர் தேவனில் வைத்த தளராத விசுவாசத்தில் எழுந்தவையாதலால் நாமும் அவரைப் பின்பற்ற முயன்ருல் அதே விசுவாசத்தைக் கொண்டிருக்க வேண்டும். நாம் தேவனுடைய கரங்களில் இருக்கிருேம்; அவர் எம்மைப் பாதுகாத்து வருகிருர் என்பதை உணர்ந்தால் எல்லாவற்றையும் அவர் கையில் விட்டுவிடத் துணிவோம். இதுவே கிறிஸ்துநாதர் போதித்ததும் சூசையப்பர் வாழ்ந்து காட்டியதுமான வழியாகும். ஆனுல், சுய முயற்சியையும், ஊக்கத்தையும் கைவிடவேண்டுமென்பது இதன் அர்த்தமல்ல. எமது சகல முயற்சிகளின் விளைவுக்கும் தேவனிலே நம்பிக்கை இருக்கவேண்டும். இவ்விடயத்தில் சூசையப்பர் நமக்கொரு முன்மாதிரிகையாக விளங்குகிருர். அவரது சீவியத்தைப் பின்பற்றினுல் அதுவே தேவ திருவருளை அடைவதற்கு ஒரு சிறந்த வழியாகும்.

## இவ்வருட தவக்காலத்துக்கு ஒரு விசேஷ சிந்தனை

இங்கிலாந்தில் விவாகரத்துச் செய்வதை இலகுவாக்குவதற்குப் பாராளுமன்றத்தில் மசோதாக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இங்கிலைமையில் கத்தோலிக்கர்கள் மனந்தளராது தேவனுடைய கட்டளையை அனுசரிப்பதற்கு இத்தவக்காலத்தில் விசேஷ ஞானச் சிந்தனை செய்யுமாறு லங்காஸ்ரர் மேற்றிராணியார் வோலிஅடிகளார் தமது தபசுகால நிருபத்தில் தம் மக்களைக் கேட்டிருக்கிருர்.

# மன்னிப்பு வேண்டுமா?

— அருட்திரு. துரைசிங்கம், அ. ம. தி. —

பாவத்தளைகளால்கட்டுண்டு இன்னலுறும் மானிடஇனத்தை விடுதலைசெய்யவந்த யேசு வாய்ப்புக் கிட்டியபோதெல்லாம் பாவங்களை மன்னித்தார்.

கல்வாரிக் குன்றில் ஒரு காட்சி. உச்சிவெயில். மூன்று சிலுவைகள் நாட்டப்பட்டிருந்தன. எட்டாம்நாள் பிறைபோல் சனக்கும்பல் சூழ்ந்து நின்றது. சனங்கள் வைத்த கண் வாங்காது பார்த்து நின்றனர். யூதர்களின் வன்மமும் விட்டபாடில்லை. சிலர் யேசுவைப்பார்த்து எள்ளிநகையாடினர். இந்நேரத்தில் யேசு சுற்றுமுற்றும் பார்த்தார். "பிதாவே, இவர்களை மன்னியும்; ஏனெனில், தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிருர்கள்."



யாரை மன்னிப்பது? நெஞ்சத்திலே குமுறும் வஞ்சத்தைத் தீர்ப்பதற்கு யேசுவின் சிலுவைச்சாவிற்கு வழிசெய்த யூதர்களையுமா? கட்டிக் கசையடிகொடுத்த கயவர்களையுமா? முகத்தில் துப்பி மானபங்கஞ் செய்த மறஉள்ளம் படைத்தவர்களையுமா? மூன்றுமுறை அறியேனென்று மறுதலித்த இராயப்பரையுமா? ஆம், இவர்களையும் மன்னித்தார். இன்னும் காலாகாலத்தும் தம் சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும் துரோகம் புரிய விருப்பவர்களுக்காகவும் மன்னிப்பு வேண்டினுர்.

அன்று மட்டுமன்று. இன்றும் பாவசங்கீர்த்தனம் என்னும் அரிய அருட்சாதனமூலம் மன்னிப்பு அருளுகிருர் கிறிஸ்து. மன்னிப்பு வேண்டுவோருக்கு மன்னிப்பு மறுக்கமாட்டார் இறைவன். ஆனுல் ஒரு நிபந்தனை. மன்னிப்பு இறைவனிடம் பெறவேண்டுமானுல் எம் அயலாருக்கு மன்னிப்பு அளிக்கவேண்டும் நாம்.

எமது வாழ்வில் நடப்பதென்ன? ஒருசிலர் ஒருசிறு பிழை செய்தால் அதற்காகப் பல்லுக்குப்பல் பழிக்குப்பழி வாங்கத் திட்டம் தீட்டுகின்ருேம். "இவன்செய்த கொடுமைக்கோரளவில்லை. ஆகையால் இவனேடு ஒருதொடர்பும் வைத்திருக்கப் போவதில்லை. இவன் முகத்தில் ஒருபொழுதும் முழிக்கப் போவதில்லை என்றெல்லாம் வன்மம் சாதிக்கின்ருேம். வைராக்கியம் பாராட்டுகின்ருேம், வடு வளர்க்கின்ருேம். இது மன்னிப்பு வாழ்வுக்கு முரணானது.

இத்தகையோர் தேவ சந்நிதியில் பிரவேசிக்க அருகதையற்ருேர். "நீ செபம் செய்யும்போது உன்சகோதரன் உன்மீது மனத்தாங்கலாயிருப்பானென எண்ணுவாயாகில் உடனே அவனை மன்னித்துவிடு. அப்போது வானுலகத் தந்தை உன்னை மன்னிப்பார். நீ காணிக்கைசெலுத்த முன்வரும்போது உன் சகோதரன் உன்மீது மனத்தாங்கலாயிருக்கிறுனென உணர்வாயாகில் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய்விடு. முதன்முதல் உன்சகோதரனோடு உறவாடு. அதன்பின் உன் காணிக்கையை ஒப்புக்கொடு. அப்போது உனது காணிக்கை ஏற்றுக் கொள்ளப்படும்" என்கின்ருர் கிறிஸ்து, எமது மன்னிப்பு வள்ளல்.

நாம் நாள்தோறும் பலமுறை ஓதுவது கர்த்தர் செபித்த செபம். "வானுலக தந்தையே நான் என் அயலாரை மன்னிப்பதுபோல் நீர் நம் என் பிழையை மன்னியும்."

"படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்." நாம் சொல்வது ஒன்று; செய்வது வேறொன்று. ஒருவன் சொல்வதொன்று செய்வதுவேறொன்றுயிருந்தால் அல்லது உள்ளொன்று வைத்துப் புறமொன்றுபேசுவானுயிருந்தால் அவனைத் துட்டனென மதித்துத் தூர விலக்குகின்ருேம். ஏனெனில், இது இரட்டை வாழ்வு, போலிவாழ்க்கை. நாம் நாள்தோறும் பலிசெலுத்துகிருேம். அல்லது ஒன்றுகூடிச் செபிக்கின்ருேம். ஆனுல் அதே வேளையில் கோபதாபங்களை இதயத்தில் காத்துவருகின்ருேம். இது போலிவாழ்க்கையல்லவா? அன்று கிறிஸ்து நம்மை மீட்கவில்லையா. அம்மட்டில் நம்மயலாரும் இறைவனின் நேசப்பிள்ளைகளல்லவா? ஆகையால் அவர்கள் யாபேரும் நமது சகோதரர்களல்லவா? அப்படியிருக்க நாம் பகை கொண்டாடுவது ஏது?

வழிபாட்டுவாழ்வு கிறிஸ்தவஅன்ருட வாழ்வோடு பின்னிப்பிணைந்தது. கோவிலில் தொடங்கி அங்கே முடிவதல்லஅது. மன்னிப்புவாழ்வு வாழாவிடில் பலிசெலுத்துவது அர்த்தமற்றது. செபிப்பது வெறும் நடிப்பாகும். கொடைகள் வழங்குவதும் விழலுக்கிறைப்பதாகும். ஏனெனில் பலி வாழ்க்கையும், ஒன்றுகூடிச் செபிப்பதும் சகோதரத்துவத்தின் அடையாளம்; ஒற்றுமையின் சின்னம்.

ஆகவே கிறிஸ்துவை உண்மையாக நேசிப்போமானுல் அவருடைய மன்னிப்புக்கு அருகதையுடையவர்களானுல் அயலாருக்கும் மன்னிப்பு அருளுவோம். அப்போது இறைவனிடமும் மன்னிப்பு தவருது பெறுவோம்.

### அரசாங்கத்தின் மகிமைப்பட்டம்

தென்வியற்னுமில் கல்விச்சேவை செய்துவரும் டி லாசால் சந்நியாசசபையைச் சேர்ந்த 18சகோதரர்களுக்கு அத்தேச அரசாங்கம் விசேஷ பட்டங்கள் அளித்திருக்கின்றது. இவர்களுள் பிறதர் லூயிஸ் 86 வயதுடையவர். 65 வருடம் அந்நாட்டில் கல்விச்சேவை புரிந்திருக்கின்ருர்.

## திருக்குடும்ப கன்னியர் மகாநாட்டிற்கு

ஏப்பிரல் மாதத்தில் பிரான்சு தேசத்தில் போர்டோ எனும் நகரில் திருக்குடும்பக் கன்னியரின் மகாநாடு நடைபெறவிருக்கின்றது. உலகின் பல பகுதிகளில் நற்செய்தித் தொண்டில் ஈடுபட்டிருக்கும் இச்சபையின் அதிகாரிகள் எல்லோரும் கூடித் திருச்சபையின் மறுமலர்ச்சியிலே தாம் என்ன விதத்தில் திட்டமிட்டு முன்னேறவேண்டுமென்று கலந்தாலோசிப்பார்கள். இலங்கையிலிருந்தும் 6 பேர் பங்குகொள்ளுவார்கள். யாழ்ப்பாணப் பகுதியின் பிரதிநிதிகளாகச் சிரேஷ்டதாயார் விசிட்டேசனும், சங். மறியா, சங். பூலாலி இவர்கள் மூவரும் சென்றவாரம் இலங்கையிலிருந்து சென்றிருக்கின்றனர்.

# பாவத்திலிருந்து எழுந்து பரமனை நோக்குங்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969ஆம் ஆ. பங்குனி மீ 15ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. ஏஜன்ட்: "கத்தோலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org